மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நகரங்களை மூன்றாகப் பிரித்து இருக்கிறோம். இன்றைக்கு இது எல்லா நகரங்களிலும் இல்லை. சென்னையை முதல் பிரிவிலே சேர்த்து இருக்கிறோம். சென்னையிலே தொழிற்சாலைகள் 2,000 சதுர மீட்டர் வைத்துக் கொள்ள முடியும். இரண்டாவது பிரிவாக, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலத்தை வைத்திருக்கிறோம். அவர்கள் 3,000 சதுர மீட்டர் வைத்திருக்க முடியும். திருநெல்வேலியை மூன்றாவது பிரிவாக வைத்திருக்கிறோம். அவர்கள் 4,000 சதுர மீட்டரை வைத்துக் கொள்ளலாம். இந்த நகரங்களைத்தான் நில உச்ச வரம்பு சட்டத்திற்குள் வைத்திருக்கிறோம். நில உச்ச வரம்பு சட்டம் வந்ததற்குப் பிறகு 3–8–76-க்கு பிறகு அவர்கள் அந்த நிலத்தை விற்றிருக்க முடியாது. விற்றிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளிகளை நடத்த நிர்வாகக் குழுக்கள் அமைத்தல்

*வினா எண் 553—திரு. கா. கோபால கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமூகத்தைச் சேர்ந்தவர் பள்ளியை நடத்தினால் நிர்வாகக் கமிட்டி அமைக்க வேண்டும் என்றும் மற்றவர் நடத்தினால் அது வலியுறுத்தப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973-ன் பிரிவு 15—ன் படி ஒவ்வொரு பள்ளியிலும் பள்ளிக் குழு (School Committee) அமைக்க வேண்டும். ஆனால் சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளி நிர்வாகிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேற் சொன்ன சட்டத்திற்கெதிராக தொடுத்த வழக்கில் பள்ளிக் குழுக்கள் அமைத்தல் தொடர்பான சட்டப் பிரிவு 15 உட்பட பல பிரிவுகள் மொழி மற்றும் மத அடிப்படையில் அமைந்த சிறுபான்மையினர் பள்ளிகளுக்குப் பொருந்தாது என 17–12–75 அன்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதன் காரணமாக சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் பள்ளிக் குழு ஏற்படுத்தும்படி வலியுறுத்த இயலவில்லை.